## சுருக்கம்

பொதுப்பணித்துறை – கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள 8 பொதுப்பணித்துறை குளங்கள்-இக்குளங்களை ஒரு முறை செயலாக்கம் (One time Operation) மூலம் மேம்படுத்த கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (கூ1) துறை

அரசு ஆணை (ப) எண்.240

நாள்: 22.5.2008
வைகாசி 9
திருவள்ளுவர் ஆண்டு 2039
படிக்கப்பட்டது.

1. மேயர், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயரது கடிதம் நாள் 8.1.2008.

---

ஆணை:

மேலே 1-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 8 குளங்களை நன்றாக புனரமைத்து மழைநீர் சேகரிப்பு செய்து பராமரிக்கும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் அவர்களின் கோரிக்கை குறித்து அரசு நன்கு பரிசீலித்து 15.2.2008 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் கோயம்புத்தூரில் நடை பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 8 குளங்களையும் ஒரு முறை செயலாக்கம் (One time Operation) மூலம் மேம்படுத்த, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணை வழங்குகிறது.

(i) மேற்படி குளங்களை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் (JNNURM) கீழ் மேம்படுத்தும் பணியை பொதுப்பணித்துறையின் தொழில் நுட்ப மேற்பார்வையின் கீழ் மாநகராட்சியே மேற்கொள்ளவேண்டும்.

(ii) இது குறித்த விரிவான திட்ட அறிக்கைக்கான இசைவினை (Clearance of DPRS) பொதுப்பணித்துறையால் வழங்கப்பட வேண்டும்.

(iii) கண்மாய்களைச் சுற்றியுள்ள கண்மாய் கரைபகுதிகளிலும், புறவாய் பகுதிகளிலும் பொழுதுபோக்கு மற்றும் நடையாளர்பாதைகள், சாலைகள், பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மாநகராட்சியே மேற்கொள்ளவேண்டும்.

(iv) இக்குளங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள சுமார் 7,000 குடும்பங்களை வெளியேற்றுதல் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வு அளித்தல் குறித்து மாநகராட்சியே பொறுப்பேற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(v) குளங்களை மேம்படுத்தும் பணி முடிந்த பிறகு இந்த குளங்கள் தொடர்ந்து பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்துவரும். (After the completion of Improvement work, the tanks will continue to be under the control of Public Works Department)

(vi) பொதுப்பணித் துறை பொறியாளர்களை, இக்குளங்களை மேம்படுத்தும் பணிக்காக அயற்பணி அடிப்படையில் தேவைக்கேற்ப மாநகராட்சியில் நியமித்துக்கொள்ளலாம்.

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.195/DS (AR) 08 நாள் 20.5.2008ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
பொதுப்பணித்துறை, பொள்ளாச்சி மண்டலம், கோயம்புத்தூர்.
முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும்
தலைமைப்பொறியாளர் (பொது), நீர்வள ஆதார அமைப்பு,
பொதுப்பணித்துறை, சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர்.
மேயர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந II) துறை, சென்னை-9.
நிதி (பொ.ப.II/ந.நி. (ம) கு.வ) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.